IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

S.C. No. 58/2013

சாட்சி : PW6

பெயர் : சுந்தரம் தேதி: 06-06-2025

**<u>CMP.No. 106/2025 மற்றும் CMP.No. 132/2025 ல் குவிமுச பிரிவு 311 ன் படி மனு அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

01.02.2011 மற்றும் 02.02.2011 அய்யம்பெருமாம்பட்டி மற்றும் அஸ்தம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பு வகித்த விவத்தை போலிஸ் விசாரணை செய்து, பதிவு செய்த குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்தில் சொல்லியிருந்தேனா என்றால் சொல்லியிருந்தேன். அவ்வாறு சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அலுவலக தகவல் பலகையில் நான் பணி நிமிர்த்தம் அலுவலகத்தை விட்டு வெளியே செல்ல நேர்ந்தால் அது குறித்து எழுதி வைத்துவிட்டு செல்வேன். ஆனால் அது குறித்து உயர் அதிகாரிக்கு அறிக்கை எதுவும் அனுப்பவதில்லை. தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவிப்பேன்.

என் அலுவலகத்தில் நகர்வு பதிவேடு பராமரிப்பதில்லை. அவ்வாறு பதிவேடு பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சுற்றறிக்கை உள்ளதா என்று எனக்கு தெரியாது. அஸ்தம்பட்டி காவல் நிலையம் குடியிருப்புகள் மற்றும் ஜனநடமாட்டம் நிறைந்த பகுதியில் உள்ளது. விசாரணை சமயத்தில் போலிசார் பொதுஜனம் யாரையாவது சாட்சியாக இருக்க அழைத்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது.

02.02.2011ம் தேதி 07.30 மணிக்கு சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்ட இடத்திற்கு காவல் துறை வாகனத்தில் சென்றோம். அந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. காவலர் ஓட்டினார். அவர் பெயர் நியாபகம் இல்லை. அஸ்தம்பட்டி, ஆத்துக்காடு பாலம் ஜனநடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் போலிசார் பொதுஜனம் யாரையாவது சாட்சியாக இருக்க அழைத்தார்களா என்றால், அப்போது யாரும் அங்கில்லை, அழைக்கவில்லை. மேற்படி இடம் ஜனநடமாட்டம் நிறைந்த பகுதி என்றாலும், அந்த சமயத்தில் நிறைய ஆட்கள் வேலைக்கு செல்வார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக மறுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கைப்பற்றுதல் மகஜரை காவலர் எழுதினார். பெயர் தெரியவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தை படித்து பார்த்துதான் கையெழுத்திட்டேன். அ.சா.ஆ–19 ல் நேரம் காலையா? மாலையா? என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை.

சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து என் முன்னிலையில் போலிசார் சா.பொ–20 மற்றும் சா.பொ–21ஐ அ.சா.ஆ–19 ன் வாயிலாக கைப்பற்றியிருக்கவில்லை என்றாலும், போலிசார் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயார் செய்த ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துவிட்டு போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

போலிசார் என்னை விசாரித்தபோது என்னுடன், பட்டியல் சாட்சி–17 வந்திருந்ததாக சொல்லியிருந்தேனா என்றால் சொல்லியிருந்தேன். அவ்வாறு சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. குறிப்பாக என்னுடைய குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்தில் போலிசார் என்னை விசாரணைக்கு வரும்படி தகவல் அளித்த பொழுது, என் உதவியாளர் வெளியே சென்றிருப்பதால் நான் மட்டும் சென்றதாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான்.

சா.பொ–22 பைக் கைப்பற்றப்பட்டது, தீவட்டிப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் என்று நான் சொல்லியுள்ள நிலையில், அந்த இடம் காலை 10.30 மணியளவில் ஜனநடமாட்டம் நிறைந்த பகுதியாக இருக்கும் என்று சொன்னாலும் சரிதான். அந்த இடத்தில் போலிசார் பொதுஜனங்கள் யாரையாவது சாட்சியாக இருக்க அழைத்தார்களாக என்றால் அது எனக்கு தெரியாது. குமார் சைக்கிள் கடையில் குமார் இருந்தார். போலிசார் மேற்படி குமாரை விசாரித்தார்கள்.

குமார் சைக்கிள் வாடகை நிறுத்தத்தில் மேற்படி சா.பொ–22 வாடகைக்காக நிறுத்தப்பட்ட விவரத்தை எடுத்துரைக்கும் பதிவேட்டை போலிசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. அவ்வாறு சொன்ன நேரம், சொன்ன இடத்திலிருந்து 2ம் எதிரியிடமிருந்து சா.பொ–22 கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சா.பொ–22 ஐ கைப்பற்றுதல் மகஜர் காவலர் எழுதினார். அவர் பெயர் தெரியாது. அ.சா.ஆ–23ல் கைப்பற்றப்பட்ட நேரம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அது பகலா, இரவா என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

சொன்ன நேரத்தில், சொன்ன ஆவணங்கள் எதுவும் சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், சொன்ன பொருட்கள் சொன்ன எதிரியிடமிருந்து என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டு, எதிரிகள் சொன்னவாறு எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுத்திருக்கவில்லை என்றாலும், சொன்ன ஒப்புதல் வாக்குமூலங்கள் என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டவை அல்ல என்றாலும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து செய்து, போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

உண்மையில் நான் மேற்படி நடவடிக்கையில் சாட்சியாக இருந்து சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கையெழுத்து செய்திருந்தால் உரிய வருவாய் துறை விதிகளை கடைப்பிடித்திருப்பேன் என்றாலும், அவ்வாறு நான்

முறைப்படி சாட்சியாக இல்லாத காரணத்தினால் தான் விதிகளை கடைப்பிடித்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தை 3ம் எதிரி ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டது.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சர்க்கார் கொல்லப்பட்டி என்ற கிராமத்திற்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி உள்ளார் என்றால் சரிதான். நான் மிட்ட அய்யபெருமாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக தான் சம்பவ சமயத்தில் இருந்தேன். பொதுவாக நான் மிட்ட அய்யபெருமாம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் என்று தான் குறிப்பிடுவேனே தவிர கொல்லப்பட்டி, சின்ன கொல்லப்பட்டி, பெரிய கொல்லப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி என சொல்லமாட்டேன் என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய போலிஸ் விசாரணையில் கொல்லப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சா.பொ–19, சா.பொ–20 மற்றும் சா.பொ–21 ஐ அஸ்தம்பட்டி, ஆத்துபாலம் அருகே கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மூன்று சான்று பொருட்களின் அளவுகளும் வெவ்வேறானது. கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ–17, அ.சா.ஆ–19 மற்றும் அ.சா.ஆ–21ல் மேற்படி சான்று பொருட்களின் அளவுகள் மூன்றும் ஒரே மாதிரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

முதல் சான்று பொருள் சா.பொ–19 ஐ எடுத்து ஆஜர் செய்த போது, சா.பொ–20 மற்றும் சா.பொ–21 அதே இடத்தில் தான் இருந்தது. மேற்படி சான்று பொருட்கள் சா.பொ–19, சா.பொ–20 மற்றும் சா.பொ–21 ல் அளவுகளை என் முன்னிலையில் அளக்கவில்லை. சாட்சி மீண்டும் கைப்பற்றப்பட்ட இடத்திலேயே அளந்ததாக கூறுகிறார்.

எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பாக காவல் நிலையத்தில் அவர்களுக்கு சொல்லிக்கொடுத்தார்களா என்று எனக்கு

தெரியாது. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகளிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கடைசிப்பக்கத்தில் மட்டும் கையெழுத்து வாங்கினார்கள்.

காவல் நிலையத்தில் ஏற்கனவே வைத்து தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. காவலர் அழைத்தால் சாட்சியம் அளிக்கவேண்டிய கடப்பாடு விதி எதாவது எங்கள் துறையில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து என் முன்னிலையில் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்பட்டு, எந்த ஒரு எதிரியும் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், பின்னிட்டு போலிசார் தயார் செய்துவைத்திருந்த ஆவணங்களில் நான் கையெழுத்து செய்துவிட்டு போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேலும் 2ம் எதிரி தரப்பு ஏனைய குறுக்கு விசாரணைகளை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சான்று பொருட்களை கைப்பற்றிய பிறகு தான் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

1,2 எதிரிகளின் ஏனைய குறுக்கு விசாரணையை 3ம் எதிரி ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டது.

ஒம்/- S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.